விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 07 இதழ் 194
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23—08—1992

## இலங்கை அரசியலில் 'கொலைஞர் படை' ஆதிக்கம்

(கொழும்பு)

தற்போதைய இலங்கை அரசியலில் அரசின் கொலைஞர் படைமுக்கிய இடம்வகிப்பதாக 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் பி.பி.ஸி. க்கு அளித்த பேட்டியின போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அரசியல் வாதிகளும் பத்திரிகையாளர்களும் கூட இந்த அரசின் கொலைஞர் படையின் நெருக்கடிகளுக்கு முகம் கொடுகக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

பத்திரிகையாளர்கள் மீது

(4ம் பக்கம் பார்க்க)

## 15 படையினர் பலி 22 பேர் காயம்

(புதுடில்லி)

யாழ் குடாவில் மேற்கொள்ளப்பட்ட 'ஒபரேஷன் பூகம்பம்' இராணுவநடவடிக்கையின்போது 15 படையினர் பலியாகியுள்ளதாக ஏஜன்சி செய்திகளை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

இம்மோதலில் 22 படையினர் படுகாயமடைந்ததாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

(கே-சி)

# ஒபரேஷன் பூகம்பம்-1 பூர்த்தி
# விரைவில் அடுத்த நடவடிக்கை

### - கூட்டுப்படை தலைமையகம் அறிவிப்பு -

(கொழும்பு)

வலி-வடக்கு, வலி-மேற்கில் கடந்த மூன்று நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த 'ஒபரேஷன் பூகம்பம் 1' இராணுவ நடவடிக்கை பூர்த்தியடைந்துள்ளதாகவும், அடுத்த நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகுமெனவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## வடமராட்சி நோக்கி அடுத்த தாக்குதல்

(கொழும்பு)

வடமராட்சி நோக்கியே அடுத்த இராணுவ நடவடிக்கையான ஒபரேஷன் பூகம்பம்-2 இடம்பெறுமென கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

கரையோரப்பகுயை இலக்கு வைத்தே இத்தாக்குதல்நடாத்தப்பட்டதாகவும் அடுத்த கட்ட தாக்குதலும் இவ்வாறு அமையுமெனம் இராணுவஅதி

(4ம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாய் நோக்கி ஆட்லறி ஷெல் வீச்சு

(ஏழாலை)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை சண்டிலிப்பாய் வடக்குப்பகுதியை நோக்கி ஆட்லறிஷெல்கள் வீசப்பட்டன.

இவற்றில் 8 ஷெல்கள் சண்டிலிப்பாய் வடக்குப்பகுதியில் பல வீடுகள்மீதும் கண்ணகை

(4ம் பக்கம் பார்க்க)

## அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவு முறிகிறது!

(சென்னை)

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், அ. தி. மு க. வுக்கும் ஏற்பட்டிருந்த கசப்பு நிலை முற்றி தற்சமயம் நட்பு முறியும் தறுவாயில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியை அ. தி. மு.க. எதிர்த்து போட்டியிடும் என மாநில கல்வி அமைச்சர் அரங்கநாயகம் நேற்று அறிவித்துள்ளார்.

அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்தபின் சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக செயல்பட்டு இந்திராகாங்கிரஸ் கட்சியை தலைகுனிய வைத்ததாக இந்திராகாங்கிரஸ்கட்சியினர் குற்

(2ம் பக்கம் பார்க்க)

## அரசியல்தீர்வா?ராணுவதீர்வா இக்கட்டான நிலையில் பிரேமா

(மணிலா)

இலங்கை அரசு பல்வேறுபட்ட பிரச்னைகளை எதிர்கொண்டு இருப்பதனுல் அவசரமாக அரசியல் ரீதியான தீர்வொன்றை தமிழர் பிரச்னைக்கு தேடியாகவேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக ஏ. எவ். பி. செய்தியாளர் இலங்கை பற்றிய நிலைபற்றி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தேயிலை

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரேமா மீது அநுரா கண்டனம்

(கொழும்பு)

மனிதகுல வரலாற்றில் தீவிரவாத குழு ஒன்றிற்கு பிரேமதாசா அரசுபோல் வேறு எந்தவொரு அரசும் ஆயுதஉதவி வழங்கவில்லை யென திரு அநுரா பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## மல்லாகம் அகதிமுகாம் மீது ரொக்கட், கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் நேற்றுக்காலை அகதிமுகாம் மீது குண்டுவீச்சு விமானங்களும், ஹெலிகொப்டர் ஒன்றும் கடும் தாக்குதலை மேற்கொண்டதில் முகாம் பலத்த சேதமடைந்துள்ளது.

வலி. வடக்குப் பகுதியை காலை 6-05 மணியளவில சுற்றி வட்டமிட்ட 3 பொம்மர்கள் மல்லாகம் குளமன்கால் பகுதியிலுள்ள அகதிகள் முகாம்கள், குடிசைகள் மீது பத்திற்கும் மேற்பட்ட ரொக்கட்டுகளை வீசியதுடன் ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதலும் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலினுல் செ. வசந்தராணி (வயது 18) க. மதன் (வயது 16) வசந்தி செல்லர் (22-வயது) எஸ்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வெடிக்காத நிலையில் குண்டுகள், ஷெல்கள்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமான குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களின் போது வெடிக்காத நிலையில் பல விமானக்குண்டுகளும், ஷெல்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பொன்னுலை, சுழிபுரம், வடலியடைப்பு ஐயனுர் கோவில், மூளாய் பகுதிகளிலிருந்தே இவ்வாறு ஷெல்களும், விமானக் குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளனவாம்.

இதேவேளை வேறுசிலபகுதிகளிலும் இவ்வாறு ஷெல்களும், விமானக் குண்டுகளும் வெடிக்காத நிலையிலிருப்பதாகக் கூறப்படுகிறது.

(71-சி)

## புலிகளுடன் தொடர்பு; கருணாநிதி மறுப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளுடனே அல்லது வேறு எந்தப் போராளிக் குழுக்களுடனே தமது கட்சி தொடர்புகொண்டிருக்கவில்லை என்று தி. மு. க தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜீவ் காந்தி, பதம

(4ம் பக்கம் பார்க்க)

## விமானங்கள் எரிகுண்டு வீச்சு பலவீடுகள் தீப்பற்றிஎரிந்தன

(உடுவில்)

குண்டு வீச்சு விமானங்கள் நேற்று மேற்கொண்ட 'எரிகுண்டு வீச்சு' தாக்குதலில் பல வீடுகள் தீப்பற்றி எரிந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை 6-30 மணிக்கு குண்டுவீச்சு விமானங்கள் மல்லாகம், அளவெட்டி, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு பகுதிகளில் எரிகுண்டு தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதலினுல் இப்பகுதிகளில் உள்ள பல வீடுகள் தீப்பற்றி எரிந்துள்ளன. பல இடங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியதால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

(109-சி)

## ஏக்கத்தால் மரணம்

(ஏழாலை)

மல்லாகத்துக்கு இராணுவம் வந்துவிட்டது என்ற வதந்தியைக் கேட்ட எஸ். சோமசுந்தரம் (வயது - 50) என்பவர் ஏக்கத்தினுல் மரணமானர்.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையின் பாரிய வாகன சாரதி

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவிதமான இந்திய இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### ஞானதிபம் சஞ்சிகை

04-09-92-ல் வியாழமாற்றம். 12 இராசிகளுக்கும் பலன்கள். பிரம்மஞானி கந்தையா சுவாமிகள (குடைச் சாமி) வாழ்க்கை வரலாறு. சத்தியசாயிபாபா திருஅவதாரமும், அற்புதங்களும். மூவர்ண முகப்புக்கவர் ஆசிரியர்: ஞானகுரு. எங்கும் விற்பனையாகின்றது. (சி 6719)

### தோத்திரத் திரட்டு

நல்லைக்கந்தன் ஆலயமுகப்புடன் தினசரி வழிபாட்டுத்தோத்திரத் திரட்டு விலை ரூபா20/- திருவிழாக்கால மலிவுவிற்பனையாக ரூபா 15/-, நல்லை ஆதீனத்திலுள்ள அஷ்டலக்ஷ்மி புத்தகசாலையில் கிடைக்கும். (சி-6710)

### பக்தி நூல்கள்

பக்தி நிறைந்த படங்களுடன் சாயி பஜனை ரூபா 20/-. சரஸ்வதி பாமாலை ரூபா 20/-. பிள்ளையார் கதை ரூபா 20/-. தினசரி தோத்திரத் திரட்டு ரூபா 20/- ஆறுபடை கந்தஷஷ்டி கவசம் ரூபா 20/- அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-6712)

### வாங்கலாம்/விற்கலாம்

உங்கள் கடிகாரங்கள் பழையனவாகிவிட்டனவா? அவற்றிற்கு நியாய விலை போட்டு புதியன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். உதிரிப்பாகங்களுக்கான றேடியோக்கள், கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (பழைய விகாரை முன்பாக) (சி-6707)

### சோதிடம்

Anpugee. Shyanbugee 09-09-1992 வரை தனித்துவமாக இயங்குகின்றது. 29-10-1992 ற்குப் பின்னர் "Russiva" எமக்காக விரதம் அனுஷடிப்போருக்கு மட்டும் 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர். (சி-6718)

## பெயர் மாற்றம்

இலக்கம் 199, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி வாசியாகிய வ. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனது பெயரை சுதாகரன் என்று பெயர் மாறறம் செய்துள்ளேன். இன்று முதல் சகல நடைமுறைகளுக்கும் சுதாகரன் என்ற பெயரே வழங்கப்படும் எனவும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

வ. சுதாகரன்
வட்டக்கச்சி.

(ஏ-2383)

## St. JOHN'S COLLEGE, JAFFNA and CHUNDIKULI GIRLS COLLEGE JAFFNA

## ADMISSION 1993

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உண்டு.
   ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு.
2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-9-92
   - (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 1 9-92 முதல் 14 9-92 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   - (ஆ) எக்காரணம் கொண்டும் 14-9-92-க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   - (இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   - (ஈ) 21-9-92-க்குப்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்ப அத்தாட்சிப்பத்திரம் இணைக்கப்படவேண்டும். பிழையாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வக் கல்லூரிகளில் படிவமொன்றுக்கு ரூபா 100/-செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. வயதெல்லைகள்:
   - (அ) ஆண்டு ஒன்று—விண்ணப்பதாரி 01-02-87க்கும் 31-01-88க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   - (ஆ) ஆண்டு ஆறு—விண்ணப்பதாரி 01-02-82ல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
6. பிரவேசப் பரீட்சை:
   ஆண்டு ஆறு வகுப்புக்கு 17-10-92 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்கள்

(ஏ 2354)

### விற்பனைக்கு

இறுங்கு மா எம்மிடம் விற்பனைக்குண்டு. குரக்கன் மா போன்று உணவுப் பண்டங்கள் தயாரிக்க ஏற்றது. கிடைக்குமிடம்: அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம். (ஏ-2379)

பாவித்த நல்ல நிலையிலுள்ள சுவிஸ் மணிக்கூடுகள் Roamer, Wyler, itoni, Westend, Mondia, Favreleuba. Seiko, Citizen போன்றவை. Rs 200/- முதல் பல விலைகளிலும் உண்டு. கடிகாரங்கள், றேடியோக்கள் திருத்திக்கொள்ளவும், உத்தரவாதத்துடன் வாங்கவும் டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6706)

### பழைய/புதிய புத்தகங்கள்

பழைய/புதிய புத்தகங்கள், சஞ்சிகைகள் வாங்கவும், விற்கவும்; பலன்களுடன் ஜாதகக் குறிப்புகள் எழுதிக்கொள்வதற்கும், றபர் சீல்கள் செய்வதற்கும்:- T. V. பாலா சோதிட நிலையம், புத்தகசாலை (சைவ மகாஜன மகாவித்தியாலயம் முன்பாக) கே. கே. எஸ். வீதி, இணுவில். (ஏ-2380)

### காணவில்லை

08-08-92ல் இருந்து பொமினேறியன் பெண் நாய் (யப்பானிஸ் ஸ்பிற்) வெள்ளை நிறம் காணமல்போய்விட்டது. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். காவல்துறையிடமோ அல்லது கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்திலோ தொடர்புகொள்ளவும். சு. தருமலிங்கம் 1-ம் கட்டை, மானிப்பாய் றோட். உடுவில். (சி 6717)

### கூட்டுறவாளர் தினவிழா

[நெல்லியடி]

வடமராட்சிக் கோட்ட கூட்டுறவாளர் தினவிழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக, கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள பணியாளர்களுக்கான, கட்டுரை பேச்சுப் போட்டிகள் இன்று 23ம் திகதியும் அங்கத்தவர்களுக்கான நாடகப் போட்டி, 29ம் திகதியன்றும், சரவெட்டி திருஇருதயக கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது (160)

### ஆண்டுவிழா

[பருத்தித்துறை]

பருத்தித்துறை பிரதேச சபை சன சமூக நிலையங்களின் சமாசத்தின்கீழ் அடங்கும் மந்திகை கம்பன் கழக சன சமூக நிலையத்தின் 17வது ஆண்டு நிறைவுவிழாவும் விளையாட்டுப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று 23ம் திகதி மேற்படி சன சமூக நிலைய மைதானத்தில் தலைவர் திரு. என். ஸ்ரீதரன் தலைமையிலே நடைபெறுகின்றது. [50, 61, 160]

அகதி முகாமில்

### 800 மாணவருக்கு சீருடை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் தஞ்சமடைந்து 10 அகதிகள் முகாம்களில் உள்ள சுமார் 800 மாணவர்களுக்கு வடமராட்சி போறாட் நிறுவனம் பாடசாலைச் சீருடைகளை வழங்கவுள்ளது. (52)

பொதுஸ்தாபனங்கள்

### கோரிக்கை

(புலோலி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை மீண்டும் மருதங்கேணிக்கு இடமாற்றுமாறு அப்பகுதியிலுள்ள பொதுஸ்தாபனங்கள் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளன. (61)

## வடக்குக் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்பு செய்ய பணிப்பு

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் புனரமைப்புச் செய்யுமாறு வடக்கு கிழக்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக சகல மாவட்டச்செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு இதுவரை இருந்து வந்த அதிகாரங்களை விட தற்போது கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வந்த யாப்பு விதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் புதிய யாப்பின் பிரதிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (71)

### வீடமைப்புக் குழு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிரதேச வீடமைப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக்குழுவுக்கு மயிலங்காடு, ஏழாலை தெற்கு, மல்லம், உடுவில் கிழக்கு இணுவில், சுன்னாகம் கிராமங்களில இருநது பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர். (109)

### அ. தி. மு. க.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றம் சாட்டி வந்தனர்.

அ. தி. மு. க வுக்கு தமிழகமக்களிடையே செல்வாக்கு குன்றிவருவதாக காங்கிரஸ் கட்சினர் குற்றம்சாட்டுகின்றனர்.

இத்தருணத்திலேயே அ. தி. மு. க., காங்கிரசை எதிர்த்து போட்டியிடும என அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

நாட்டுநிலைமை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த தெய்வீக இசையரங்கு இன்றுமுதல் தொடர்ந்து நடைபெறும் என்பதை முருகன் அடியார்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இன்றைய அரங்கல்

| | | |
|---|---|---|
| திரு. எஸ். பத்மலிங்கம் அவர்கள் | — | பாட்டு |
| திரு. ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் | — | வயலின் |
| திரு. எஸ். மகேந்திரன் அவர்கள் | — | மிருதங்கம் |
| செல்வன் எஸ். நாகராஜன் அவர்கள் | — | கஞ்சிரா |

முருகன் தண்ணீர் பந்தல்
அமைப்பாளர்கள்

(சி 6720)

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

## அறிவித்தல்

எமது சங்கத்தின் சகல பணியாளர்களையும், இயக்குநர்சபை உறுப்பினர்களையும் 23-08-92ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலில் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பதில் பொதுமுகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு

22-08-92. (ஏ-2385)

Tasty!

### ஜாம் (JAM) போத்தல்கள் தேவை

ஹார்லிக்ஸ், விவா போத்தல்கள் மூடியுடனும், ஜாம் போத்தல்களும் விலைக்கு தொடர்ந்து கொள்வனவு செய்யப்படுகிறது.

### TASTE LINE INDUSTRIES (pvt.) Ltd.

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(ஏ-2376)

# கடந்த 3 தினங்களில் 50,000

# மக்கள் இடம்பெயர்ந்தனர்

## நூற்றுக்கணக்கில் வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, அளவெட்டி, பிராம்பத்தை சம்பில், ஊாரைப் புலம் ஆகிய இடங்களிலிருந்து கடந்த 3 தினங்களாக 50000 க்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

சங்கானை அம்மன்கோவில், சண்டிலிப்பாய் பாடசாலை, மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி, கட்டுடை சீரணி அம்மன்கோவிலடி ஆகிய இடங்களில் இவர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் மும்முனைத் தாக்குதலிலிருந்து உயிர் தப்புவதற்காக அப்பகுதி மக்கள் பலரும் இடம் பெயர்ந்து குறிப்பிட்ட பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மக்களில் பலர் ஆடு, கோழி, பசுமாடு ஆகியவற்றை தங்கள் வீடுகளில் விட்டுவந்துள்ளனர்.

கடந்த 3 தினங்களாக ஓயாத பீரங்கித் தாக்குதல்களும் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பண்டத்தரிப்பு மாதகல், சில்லாலை, சம்பில், காரைப் புலம், அளவெட்டி, பிராம்பத்தை, விளான், வடலியடைப்பு, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, மூளாய், பொன்னாலை, திருவடிநிலை, ஆகிய குடியிருப்புப் பகுதிகளை நோக்கி மும்முனைத் தாக்குதல்கள் இடம்பெற்றபடியிருந்தன.

வலிமேற்குப் பகுதியில் முப்படைகள் மேற்கொண்ட தாக்குதல்களினால் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. (56)

## அவுஸ்திரேலியா, மலேசியாவில் அமைச்சர் தொண்டாவுக்கு பாராட்டு

(கன்பரா)

அவுஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளில் அமைச்சர் தொண்டமானுக்கு பாராட்டு விழா நடத்துவதற்கு பெருமளவில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 30ம் திகதி அமைச்சர் தொண்டமானின் 80வது பிறந்த தினத்தை முன்னிட்டே பாராட்டு விழாவுக்கான துரித ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. (க)

## "தமிழ் இனத்தின் விடிவுக்காக எத்தகைய சவாலையும் எதிர்நோக்கத்தயார்" - அமைச்சர் தொண்டா

(கொழும்பு)

தமிழினத்தின் விடிவுக்காக எத்தகைய சவாலையும் எதிர் நோக்கத் தாம் தயாராக உள்ளதாகக் கிராமியத் தொழில்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழினத்தின் விடிவு நோக்கி தான மேற்கொண்ட பணி தொடரும் என்றும், தமக்குக் கிடைக்கும் பாராட்டுக்கள் யாவும், மலையகத் தோட்டத் தொழிலாளரையே சாரும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## இனப்பிரச்னைத் தீர்வுக்கு ஐ. தே. க. எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை

(கொழும்பு)

"வடக்கு - கிழக்கில் தற்போது தொடரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதே அரசு எதிர்நோக்கும் முக்கிய சவாலாகும்"

கலாச்சார அலுவல்கள் தகவல்துறை சுதேசிய வைத்தியத்துறைஅமைச்சர் டபிள்யு ஜே. எம். லொக்குபண்டார நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற நம்பிக்கையில்லாப்பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மற்றொரு உறுப்பினரான சிறில் பிரேமச்சந்திரா இவ் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு ஐ தே கட்சி எதுவித முயற்சியும் எடுப்பதாக தெரியவில்லை என்றார். பல உறுப்பினர்கள் இவ் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். (க)

## க. பொ. த (உயர்தர) பரீட்சையைத் தொடர உதவுமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

க. பொ. த (உயர்தர) பரீட்சை தொடர்ந்து நடைபெற ஆவன செய்யுமாறு யாழ்.கல்விப் பணிப்பாளர் பரீட்சை ஆணையாளருக்கு செய்தி அனுப்பியுள்ளார்.

இதேவேளை வலிவடக்கு பரீட்சை நிலையங்கள் மாறறப்பட்டுள்ளது எனவும் சூழ் நிலைக்கேற்ப இவை மாற்றமடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னமும் 2 தினங்களுடன் (25-ம் திகதியுடன்) பரீட்சை முடிவடைகிறது. இதேவேளை 5-ம் ஆண்டும் புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி இன்று ஞாயிறு நடைபெறும் எனவும் இடம் பெயர்ந்தோர் தோற்ற மாற்றுவசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (157)

## புலமைப் பரிசில் திறந்த பல்கலைக்கழக மாணவருக்கும் கிடைக்கும்

(கொழும்பு)

மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில்கள் திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கிடைக்கவிருக்கின்றன.

இதன் பிரகாரம் தகுதியுள்ள 400 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் கிடைக்கும்.

திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் தயானந்த விஜேசேகர தெரிவித்த ஆலோசனையின் பேரிலேயே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தேசிய பல்கலைக்கழக மாணவர்கள் போன்று. திறந்த பல்கலைக் கழக மாணவர்களும் புலமை பரிசில்களை பெற்றுக்கொள்ளவுள்ளனர். (கே)

### நடமாட்டம் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதிகளில் கடந்த இரு தினங்களாக கடைகள் திறந்திருந்த போதும் வீதிகளில மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. (சு)

## அமைதியே நிலவச் செய்வாய்!

நெஞ்சினில் நிறைவது எல்லாம், உந்தனை உணர்த்தும் எண்ணம்
நல்லையில் உறையும் நாதா நம்மவர் நிலையறி யாயோ?
மஞ்ஞையில் ஏறும் முருகா முக்கண் முதல்வனின்மைந்தா
மக்கள் தினந்தினம் பெருகுதுய ராலே அகதிகள் ஆகின்றாரே
வஞ்சியர் வள்ளிதெய் வானையர் சூழத் திகழ்ந்திடும் தலைவா
வையகம் தனிலே நாங்கள் வளமுற வாழ வேண்டும்
அஞ்சிடும் அவலம் போக்கி அமைதியே நிலவச் செய்வாய்
அற்புத வேலை ஏந்தி அமரர்க்கு விடிவைத் தந்தாய்!

— ப. மகேந்திரதாசன்

(இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் 21ம் திருவிழா)

## யாழ். ஆஸ்பத்திரி பிரதேச பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ். ஆஸ்பத்திரிக்குட் பட்ட பகுதியும் அதனைச் சூழ எல்லை நிர்ணயிக்கப்பட்ட பகுதியும் பாதுகாப்பு பிரதேசமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது."

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவின் யாழ்ப்பாண உப-தூதுக்குழு தலைவர் ஜேக்பிராங் கோயிசங்சு நேற்று முன் தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது:-

ஆயுதம் தரித்த எவரும் ஆஸ்பத்திரி வளவினுள் அனுமதிக்கப்படுவது இல்லை. ஆஸ்பத்திரியின் நுழைவாயிலில் இராணுவ ஆட்கள் எவரும் நிறுத்தப்பட்டிருக்கவில்லை.

ஆஸ்பத்திரி செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் வாகனங்களைத் தவிர வேறு வாகனங்கள் ஆஸ்பத்திரி வளவினுள் அனுமதிக்கப்படுவதில்லை,

செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவினால் பாதுகாக்கப்பட்டுவரும் ஆஸ்பத்திரி வளவைச் சுற்றி பாதுகாப்பு பிரதேசம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இராணுவ அல்லது அரசியல் நிலையங்கள் அமைப்பது தவிர்க்கப்படவேண்டும்.

இதனால் இப்பிரதேசத்தில் இருந்தோ அல்லது இப்பிரதேசத்துக்கு எதிராகவோ இராணுவ நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

யுத்தத்திற்கு எதிரான விளைவுகளிலிருந்து இப்பிரதேசத்தின் பாதுகாப்பு குறிப்பிடப்பட்ட விதிகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விதிகளை ஸ்ரீலங்கா படைகளும் விடுதலைப்புலிகள் அமைப்பினரும் மதித்து நடக்கச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இவ்விதிகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையிடும் உரிமையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு கொண்டுள்ளது. (க)

## ஷெல் தாக்குதல்

(ஏழாலை)

அளவெட்டி, விளான் பகுதிகளை நோக்கி ஸ்ரீலங்கா ராணுவம் ஷெல் தாக்குதலை மேற்கொண்டது இச்ஷெல் தாக்குதலால் பலவீடுகள்சேதமடைந்தன

இச்சம்பவத்தில் அளவெட்டி வடக்கு குருக்கள் சணத்து பிள்ளையார் கோவில் பகுதியில் மூவருக்கு காயமேற்பட்டது. [162 அ

## கலைப்பட்டதாரி பரீட்சைமுடிவுகள்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப்படிப்பு மாணவர்களுக்கான 1991 டிசம்பர் மாதம் நடைபெற்று முடிந்தகலைப்பட்டதாரி(பி ஏ) பரீட்சை முடிவுகள் கொழும்பில் வெளியாகிவிட்டது.

இப்பரீட்சைமுடிவுகள்விரைவில் யாழ்ப்பாணம் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (157)

## 'ஓ' பிளஸ் இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் பிறந்த ஒரு நாள் குழந்தை. மஞ்சள் காமாலை நோயினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகிறது. இக்குழந்தைக்கு 'ஓ' பிளஸ் இரத்தம் உடனடியாகத் தேவைப்படுகிறது.

இக்குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதற்கு 'ஓ' பிளஸ் இரத்தம் வழங்குமாறு இரத்த வங்கியினர் கேட்டுள்ளனர்(56)

## மாணவர்கள் கைது

(சென்னை)

ஸ்ரீராமச் சந்திரா மருத்துவ கல்லூரிமுன் உண்ணாவிரதம் இருக்க முயன்ற 30 பெண்கள் உட்பட 64 மருத்துவ கல்லூரி மாணவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம்மாலையே பொலிசாரால் விடுதலை செய்யப்பட்டனர்.

குறிப்பிட்ட மருத்துவ கல்லூரியை தமிழக அரசு மீண்டும் கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைத்ததைக் கண்டித்தே மேற்படிமாணவர்கள் உண்ணாவிரதப்போராட்டம் நடாத்த முயன்றதாக தெரிவிக்கப்பட்டது. (க)

## அரச சார்பற்ற ஒன்றியம் அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, மல்லாகம், அளவெட்டி, இளவாலை, மாதகல் பண்டத்தரிப்பு, விளான் பகுதிகளிலிருந்து ராணுவ நடவடிக்கையினால் வெளியேறி சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் உதவி அரசஅதிபர் பிரிவுகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு அரசசார்பற்ற ஒன்றியங்கள் இணைந்து மக்களுக்குத்தேவையான உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நேற்று சமைத்த உணவு வழங்கப்பட்டது. (56)

சர், செஞ் சங்க

## பிரதிநிதி அகதி முகாம்களுக்கு விஜயம்

(சாவகச்சேரி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதி வோரோனிட்டா அண்மையில் தென்மராட்சியிலுள்ள இடம் பெயர்ந்தோர். முகாம்களுக்கு விஜயம் செய்தார் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுவரும் இடம் பெயர்ந்தோர் குடிசைகளைப்பார்வையிட்ட அவர் இம்மக்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்தார்.

மட்டுவில் முகாம் விஜயத்தின் போது அங்கு அமைக்கப்பட்டுவரும் முதியோர் கல்விக்கூடம், சனசமூக நிலையம் பாலர் கல்வி நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட்ட அவர் இன்றைய காலகட்டத்தில் கல்வித்தேவையின் அவசியத்தையும் இவ்அளப்பரிய திட்டத்தைகால தாமமின்றிச் செயல்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார். (155)

## இராசி பலன்

23-08-1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 7)

தசமி இரவு 12-37 வரை, மிருகசீரிடம் மு. இ. 8-20 வரை சித்தயோகம் இராகு காலம் மாலை 4-35 முதல 6-05 வரை சுபநேரம் காலை 9-05 முதல் 10-35 வரை.

மேஷம்: நண்பர் அனுகூலம், பொருள்வரவு, புதிய தகற்றல்.

இடபம்: மனத் தாங்கல், தகாதசெயல், சிறுநஷ்டம்.

மிதுனம்: நல்ல தொரு முடிவு, நற்பெயர், தியாகம்.

கடகம்: புரியாத திகில் காரியவிக்கினம், யோசனை.

சிங்கம்: காரியவெற்றி, ஆடம்பரசெலவு, பணவரவு.

கன்னி: இஷ்டசித்தி, பணியாள்உதவி, பாராட்டு.

துலாம்: உடல்நலக்குறைவு, மனக்குறை, குடும்பபிரிவு.

விருச்சிகம்: அநாவசிய தொல்லை, மனவேதனை, கடன்.

தனுசு: நல்லமதிப்பு, சிறுமுயற்சி, வீண்வம்பு.

மகரம்: தூரபயணம், வைத்தியசெலவு, இனசனவருகை.

கும்பம்: தடுமாற்றம், மேலதிகாரிகள் சினம், கவலை.

மீனம்: கருத்துமோதல், வாக்குப்பகை, அலைச்சல்.

— ஜோஸ்யர்

## ★ மாதகல் பகுதியில் படையினரிடம் சிக்கியோர் மீது தமிழ்க் குழுவினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் வியாழந்தைப் பகுதியில் இராணுவத்தினரால் அப்பகுதி மக்களில் பலர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும், இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் அங்கிருந்து மானிப்பாய் வந்துசேர்ந்த கந்தையா சபாரட்ணம் (33 வயது) நேற்று எமது நிருபருக்கு வைத்தியசாலையில் வைத்துக் கூறினர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இராணுவம் அன்று பிற்பகல் 2 மணியளவில் துப்பாக்கிவேட்டுக்களை பிரயோகித்துக்கொண்டு தங்களை நோக்கி முன்னேறி வந்ததாகவும் 40 பேர்வரை படையினராலும் அவர்களுடன் வந்த தமிழ்க் குழுவினராலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்க் குழுவைச் சேர்ந்த 15க்கு மேற்பட்டோர் தங்களை கடுமையாகத்தாக்கியதாகவும் கத்திமுனையில் விரட்டியதாகவும் தெரிவித்த அவர் தான் நோயாளியென்றுகூறி ஒருவாறு படையினரின் பிடியிலிருந்து தப்பிவந்து சேர்ந்ததாகத் தெரிவித்தார்.

தமிழ்க் குழுவினர் பச்சை உடுப்புகளுடன் காணப்பட்டனர். இவர்களால் கூடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் வயோதிபர்கள் எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (56)

## பலாலி முகாமில் சிசில், கிளான்ஸி

[கொழும்பு]

வடபகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் 'ஒப்பரேஷன பூகம்பம்' இராணுவ நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்யும் முகமாக இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்னவும் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்ணண்டோவும் பலாலி இராணுவமுகாமிற்கு நேற்று விஜயம் செய்தனர்.

மேற்படி இராணுவ நடவடிக்கையை லெப். ஜெனரல் ஜெரி டீ சில்வா, பிரிகேடியர் ஜெகான் தலுவத்த ஆகியோர் முன்னின்று நடாத்திவருகிறார்களாம். (க-சி)

## இரு பெண்கள் படையினரால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி வடக்குப் பகுதியில் படையினரிடம் அகப்பட்ட இரு பெண்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி இராசம்மா என்பவரும் மற்றொரு பெண்ணும் விடுவிக்கப்பட்டனர்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை என்ற வயோதிபர் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட பலத்த காயத்திற்குள்ளாகிய நிலையில் பலாலி முகாமிற்கு அனுப்பப்பட்டதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

மேலும் இப்பகுதியில் பிடிக்கப்பட்ட மக்களை இராணுவத்தினர் கடுமையாக துன்புறுத்திவருவதாகவும் தெரிவித்தனர். (56)

## பெருமளவு மக்கள் நேற்றும் இடப்பெயர்வு

(மானிப்பாய்]

மானிப்பாய் பகுதியை நோக்கி நேற்றும் நூற்றுக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்துவந்துள்ளனர்.

நேற்றுக் காலை சண்டிலிப்பாய், ஆலங்குளாய் பகுதி, வடலியடைப்பு, அரசடி வடலியடைப்பு பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினாலும் இடம்பெயர்ந்த பலர் மானிப்பாயிலுள்ள பல இடங்களிலும் தங்கியுள்ளதைக் காணமுடிகிறது.

இதேவேளை சித்தன்கேணியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களும் இடம்பெயர்ந்து சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன் கோவிலில் தங்கியுள்ளனர். (71)

## பலாலி முகாமில் பத்திரிகையாளர்

(கொழும்பு)

தென்னிலங்கை பத்திரிகையாளர்கள் நேற்று பலாலி முகாமுக்கு விஜயம் செய்தனர்.

'ஒட்ரேஷன் பூகம்பம்' நடவடிக்கையில் படையினர் கைப்பற்றிய பகுதிகளை இவர்களுக்கு நேரில் காண்பிக்கவே பத்திரிகையாளர்களை இராணுவத்தினர் பலாலிக்குவிசேட விமானத்தில் அழைத்துவந்தனர். (க-சி)

## வடக்கு-கிழக்கிற்கு இரு சபை கொண்ட தனி பிராந்திய சபை - மு. காங்கிரஸ் யோசனை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்கு இரு சபைகளைக்கொண்ட தனியான பிராந்தியசபை ஒன்றை அமைக்கும் யோசனை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆராய்ந்து வருவதாகவும் செப்டம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறும் சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டில் இதுகுறித்து விளக்கமளிக்கப்படும் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இவ்விடயம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் கட்சிகளுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் எனவே சகல சமூகங்களுக்கும் நீதி வழங்கும்வகையில் மேற்படி திட்டம் அமையுமென்றும் தெரிவித்துள்ளார். (க சி)

## வெற்றிலை ஐந்து ரூபா

[உடுவில்]

மருதனார்மடம் சந்தையில் ஒரு வெற்றிலை ஐந்து ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கைகளால் பல வெற்றிலைத் தோட்டக்காரர்கள் இடம் பெயர்ந்துவிட்டமையே வெற்றிலையின் விலை திடீர் அதிகரிப்புக்குக் காரணமென கூறப்படுகிறது. (109)

## பிரேமாமீது

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளுக்கு அரசு முன்னர் ஆயுத உதவி செய்ததாக கூறப்படுவதையே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். [கே சி)

## 1வது கிரிக்கெட் டெஸ்ட் இலங்கை தோல்வி

[கொழும்பு]

இலங்கைக்கும் - ஆஸ்திரேலியா அணிக்குமிடையில் கொழும்பு 'சரா' ஸ்ரேடியத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இலங்கையணி எதிர்பாராத விதமாக தோல்வியை தழுவியது

வெற்றிபெற 181 ஓட்டங்களை பெறவேண்டிய நிலையில் ஆடத்தொடங்கிய இலங்கை 1-வது விக்கெட்டை 76 ஓட்டத்திலும், 2-வது விக்கெட்டை 98 ஓட்டத்திலும் இழந்து பின் மிக துரிதமாக சகல விக்கெட்டுகளையும் இழந்து 164 ஓட்டங்களையே பெற்றது. (மகாநாம-39, ரணதுங்க-36(

ஸ்கோர் விபரம்: ஆஸ்திரேலியா 1-வது இனிங்ஸ்-256, 2-வது இனிங்ஸ்-471, இலங்கை547-8 164. (சி)

## சண்டிலிப்பாய்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யம்மன் கோவில் பின் வீதியிலுள்ள வளவிலும் வீழ்ந்து வெடித்தன.

அத்துடன் க. சரோஜா (34-வயது), திருமதி புவனேஸ்வரி இராசையா (வயது 60) ஆகியோர் காயமுற்றனர்.

அளவெட்டி வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து இவர்களது வீடுகளில் பாதுகாப்புக்தேடிய மூவரும் காயத்திற்குள்ளாகினர்.

மேலும் இச்சம்பவத்தில் இரண்டு மாடுகள் இறக்கும் நிலையிலுள்ளன. ஒரு மாடும் ஸ்தலததிலேயே இறந்துவிட்டது. (164)

## ஒபரேஷன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காரி ஒருவர் தெரிவித்தார்.

இம்முறை நடைபெற்ற தாக்குதலில் கவச டாங்கிப் படைகளின் உதவி திருப்திகரமாய் இருந்ததாகவும், புலிகளின் மோட்டார் தாக்குதல் படையினருக்கு பாரிய பிரச்சனையாக இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [சி-க]

## மல்லாகம் அகதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வராசா [35 வயது) படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அகதிகள் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பியோடிவிட்டதால் உயிரிழப்பு ஏதும் இல்லை.

இதேவேளை மல்லாகம் மத்தியில் இராசையா என்பவரது வீட்டின்மீது பொம்மர் தாக்குதல் நடாத்தியதால் வீட்டில் அரைவாசிப்பகுதி முற்றாக சேதத்திற்குள்ளாகியது.

இதேவேளையில் மல்லாகம்-கட்டுவன் வீதியில் பொம்மர் நடாத்திய ரொக்கட் தாக்குதலினால் பெரும் குழி ஒன்று தோண்டப்பட்டுள்ளது.

மல்லாகம் காங்கேசன் வீதியிலும், அளவெட்டி டச்சு ரோட்டிலுள்ள உருத்திரா பசுபதி என்பவரின் வீடும் பொம்மரின் ரொக்கட் தாக்குதலிற்கு உள்ளாகின. (162-56-சி)

## வடமராட்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வடமராட்சி பகுதியின் கரையோரப் பகுதிகளை இலக்குவைத்தே இத் தாக்குதல் அமையுமெனவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலிகளின் கடல் வழிப் பாதைகளை துண்டிக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை அமையுமெனவும் அந்த அதிகாரி கூறினர். (சி-க)

## அரசியல் தீர்வா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி, பருவமழை பெய்யாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது ஐ. எம். எவ், உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு கடன வழங்க புதிய நிபந்தனைகளை விதித்து வருகிறது.

நாட்டின் பொருளாதாரம் பெரிதும் சீர்கெட்டுப் போயுள்ளதால் இந்த வருடம் கடன் வழங்க உறுதி அளித்த மேற்கத்தைய நாடுகள் இதுவரை அரைவாசிப் பணத்தை இன்னும் இலங்கைக்கு அளிக்கவில்லை.

தேர்தல் காலம் நெருங்கி வரும் வேளையில் இராணுவத்திற்கான செலவை மேலும் உயர்த்தினால் மக்களைக் கவரக்கூடிய பொருளாதாரத் திட்டம் எதனையும் தீட்டஇயலாமல் இலங்கை உள்ளது.

மேலும யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவ நடவடிக்கையின்மூலம் பெருந்தொகையான பொதுமக்கள் அழிவதனையிட்டு இந்தியாவின் நிலைப்பாடு மாறக்கூடும். தற்போது தற்காலிகமாக விதிக்கப்பட்டுள்ள புலிகள் மீதான தடையைக்கூட இந்தியா விலக்கிக்கொள்ளக் கூடும். பொதுமக்களின் அழிவினால் உலக அபிப்பிராயமும் இலங்கைக்கு எதிராக மாறுவதை தவிர்க்க இயலாது.

இவ்வாறானதொரு நிலையிலிருந்து அதிபர் பிரேமதாஸ மீள்வதற்கு உடனடியாகஅரசியல் தீர்வு காணவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் ஆனால் அரசியல் தீர்வா அல்லது இராணுவ தீர்வா என்ற இரண்டும் கெட்டான் நிலையில் ஜனாதிபதி பிரேமதாசா இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். [கே-சி]

## ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைநிலைய மாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக பண்டததரிப்பு கல்விக் கோட்டத்தில் கீழ்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதென பண்டத்தரிப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வீ. மகேசவேல் தெரிவிக்கின்றார்.

மல்லாகம் ம. வி. - மண்டப இல. 1, 2 - இராமநாதன் கல்லூரி [யூனியன் கல்லூரி) மருதனுமடம், அளவெட்டி அருணாசலம் வித், அளவெட்டி அருணோதயா கல்லூரி மண்டப இல. 1, 2 சங்கானை சிவப்பிரகாச மகா வித், அராலிஇந்து - வட்டு.யாழ்ப்பாணகல்லூரி, மூளாய்சைவப்பிரகாச வித் - சித்தன்கேணி கணேச வித், சித்தன்கேணி கணேச வித். - வட்டு. திருநாவுக்கரசு வித், பண்டத்தரிப்பு இந்து - வட்டு. இந்து, சில்லாலை ரோ. க. வித். - வட்டு. இந்து, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி - மண்டப இல. 1 - மானிப்பாய் இந்து, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி - மண்டப இல. 2 - மானிப்பாய் சென் ஆன்ஸ் ரோ. க. வித். (சு)

## புலிகளுடன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாப கொலைவழக்கில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டதாக கேள்விப்பட்டதிலிருந்து அதன்பால் தி மு.க.கொண்டிருந்த அனுதாபத்தை அது இழந்துவிட்டது. விடுதலைப் புலிகளுடன் தி. மு. க. ஒருபோதும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவில்லை.

1989ம் ஆண்டு தாம் முதல் அமைச்சராக இருந்தபோது பல்வேறு போராளிக்குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும்கூறினுர். (கே-சி)

## ஏக்கத்தால்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யான இவர் தனது மனைவி, பிள்ளைகளை பாதுகாப்பிற்காக வேறு இடத்தில் விட்டபின்பு வீடு திரும்பும் வேளையிலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

இராணுவம் வந்துவிட்டதென்ற வதந்திகேட்டு ஏக்கமடைந்து இவர் மரணமானுர் என்று தெரிவிக்கப்பட்டது. (162)

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து அரசின் கொலைஞர் படையின் கெடுபிடிகள் அதிகரித்ததால் அரசைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான முயற்சிகளில் தாங்கள் துரிதமாக ஈடுபடப்போவதாக பல பத்திரிகையாளர்கள் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்கள்.

சட்டவிரோதமான கொலைஞர் படைக்கு அரசு வேண்டியளவு உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகிறது.

தற்போதைய அரசைக் காப்பாற்றும் முகமாக கொலைஞர் படை எதற்கும் தயார்நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த கொலைஞர்படை சாதாரண வாழ்வுக்கு மட்டுமல்ல ஜனநாயகத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது என்றுர். (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தொடர்ந்தாரால் யாழ்ப்பாணம் இலன்கோவில் மேற்கு வீதி 97இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/1